بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

January 17 2014

**தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்**

# சுய சீர்திருத்தம் - மன உறுதி, ஈமான், புனர்வாழ்வு

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

கடந்த குத்பாவில், செயல் சீர்திருத்தத்தின் வழியில் தடைகளாக இருப்பவைகளை – நம்மை மீண்டும் மீண்டும் பின்னால் இழுக்கும் விஷயங்களை அகற்றுவதற்கு என்ன தேவை? என்பதைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. அதில் மனிதனிடம் எண்ணத்தின் ஆற்றல், சரியான முழுமையான அறிவு மற்றும் செயல் ஆற்றல் உருவாகி விட்டால், பிறகு செயல் சீர்திருத்தத்தில் தடைகளாக உள்ள தீமைகளை எதிர்க்க முடியும் எனக் கூறப்பட்டது. ஏனென்றால் செயலில் பலவீனம், எண்ணத்தில் ஆற்றல் இல்லாதபோது தான் ஏற்படுகின்றது அல்லது நல்ல செயல்கள் எது? தீய செயல்கள் எது? என்ற அறிவு இல்லாத போது தான் ஏற்படுகின்றது. நல்ல அமல்களை எவ்வாறு பெற முடியும்? எவ்வாறு செய்ய வேண்டும்? மேலும் தீய செயல்களை அகற்றுவதற்கு எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்? என்ற அறிவு இல்லாத போது தான் செயலில் பலவீனம் ஏற்படுகின்றது. அடுத்து, செயல் ஆற்றலில் தீமைகளை எதிர்க்க முடியாத அளவுக்கு பலவீனமாக இருக்கும் போது தான் செயலில் பலவீனம் ஏற்படுகின்றது.

ஆக, எண்ணத்தின் ஆற்றலை வலுப்படுத்துவது, அறிவின் பலவீனத்தை அகற்றுவது, செயல் ஆற்றலை உருவாக்குவது போன்றவை மிகவும் தேவையான விஷயங்களாகும். செயல் ஆற்றல் தனது முயற்சியினாலேயே உருவாகிறது. மனிதன் மிகவும் பலவீனமாக இருக்கின்றான் என்றால், பிறகு வெளிப்புற உதவியும் தேவையாக இருக்கின்றது. எவ்வாறிருப்பினும், இந்த விஷயங்கள் கடந்த குத்பாவில் கூறப்பட்டு விட்டன. இதனைப் பற்றி மேலும் சில விளக்கங்களை உதாரணங்கள் மூலம் எடுத்துரைப்பேன். நான் கடந்த குத்பாவில் கூறியதைப் போன்று இந்த விஷயங்களுக்கு மேலும் விளக்கம் கொடுப்பது அவசியமானதாகும். செயல் சீர்திருத்தத்திற்கு அவசியமான மூன்று விஷயங்களில் முதல் விஷயம், எண்ணத்தின் ஆற்றல் ஆகும் என்பதை நாம் பார்த்தோம்.

எண்ணத்தின் ஆற்றல் என்பது என்ன? நம்மில் சிலரது பார்வையில் எண்ணத்தின் ஆற்றலைப் பற்றி பேசப்படுகின்ற போது, இந்த எண்ணத்தின் ஆற்றல் என்பது என்னவென்று அவர்களுக்கு வியப்பானதாக இருக்கும். பெரும்பாலார் எண்ணத்தின் ஆற்றல் என்ற வார்த்தையில் இருந்தே இது ஏதோ ஒரு செயலைச் செய்வதைப் பற்றி உறுதியான எண்ணம் மற்றும் அதனை முழுமைப்படுத்துவதற்கான ஆற்றல் ஆகும் எனக் கூறுவர். பிறகு, இங்கு எண்ணத்தின் ஆற்றல் என்றால் என்ன? என்ற கேள்வி எழுப்பப்பட்டதன் அவசியம் என்ன? இதனைக் குறித்து தெளிவு பெற வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் அழகிய முறையில் இதனை எடுத்துரைத்துள்ளார்கள். எண்ணத்தின் ஆற்றல் என்பது செயல் அடிப்படையில் ஒவ்வொரு இடத்திலும் வேறுபடுகின்றது. நாம் இந்த அடிப்படை விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். நாம் இதனை கண்முன் வைக்கும் போது தான், மார்க்க அடிப்படையில் எண்ணத்தின் ஆற்றல் என்பது என்ன? என்ற கோணத்தில் நம்மால் சிந்திக்க முடியும். மார்க்க விஷயத்தில் எண்ணத்தின் ஆற்றல் என்பது ஈமானின் பெயராகும்.

பிறகு நாம் இதனை இந்த வகையில் பார்க்கும் போது, செயல் ஆற்றல் என்பது ஈமான் வளர்வதன் மூலம் வளர்கிறது. உறுதியான ஈமான் இருக்கும் என்றால், அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும் என்றால், பிறகு மனிதனுடைய பணி தானாகவே நடைபெறும். ஒவ்வொரு கஷ்டமும் அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் உதவியினால் எளிதாகிக்

கொண்டே செல்லும். செயலின் கஷ்டங்கள் இந்த ஈமானின் காரணத்தினால் காற்றில் பறந்து விடும். பிறகு மனிதன் எளிதாக சீர்திருந்தி விடுவான். இது வெறும் வாயளவில் கூறும் விஷயமல்ல. மாறாக, இதற்குரிய செயல் முன்மாதிரியை நாம் பார்க்கின்றோம். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தைப் பார்த்தோம் என்றால், ஈமான் கொள்வதற்கு முன்பிருந்த செயல் நிலைமைகள் மற்றும் ஈமான் கொண்ட பிறகு ஏற்பட்ட செயல் நிலைமைகளில் எப்படிப்பட்ட ஆச்சரியமூட்டக்கூடிய முன்மாதிரிகள் தென்படுகின்றது என்றால் வியப்பாக இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டவர்கள் யார்? அவர்களது செயல்பாடு எவ்வாறிருந்தது? வரலாறு இதனைக் குறித்து நமக்கு என்ன கூறுகின்றது? என்று பார்த்தால், அந்த நம்பிக்கை கொண்டவர்களில் திருடர்களும் இருந்தார்கள். கொள்ளையர்களும் இருந்தார்கள். தீயவர்களும் இருந்தார்கள். அவர்களில் தனது தாயுடன் திருமணம் செய்பவர்களும் இருந்தனர். தாயை பங்கிடுபவர்களும் இருந்தனர். தனது மகள்களைக் கொலை செய்பவர்களும் இருந்தனர். அவர்களில் சூதாடுபவர்களும் இருந்தனர். எந்நேரமும் சூதாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் மது அருந்துபவர்களும் இருந்தனர். எந்த அளவுக்கு மது அருந்துபவர்கள் என்றால், அவர்களுடன் யாராலும் போட்டியிட முடியாது. மது அருந்துவதை அவர்கள் கண்ணியமாகக் கருதி வந்தனர். ஒருவர் மற்றவர் மீது மது அருந்துவதில் நான் அதிகமாக குடிப்பேன் அல்லது என்னால் அதிகமாக குடிக்க முடியும் என பெருமையடித்து வந்தனர்.

ஒரு கவிஞர் தனது பெருமை மற்றும் ஆணவத்தை இந்த விஷயத்தில் வெளிப்படுத்துகின்றார். அதாவது, நான் இரவிலும் எழுந்து மது அருந்துபவனாவேன். தண்ணீரை நாம் தொடுவதே இல்லை எனக் கூறுகின்றார். சூதாடுபவர்கள் தனது சூதாட்டத்தில் பெருமை கொண்டவாறு இவ்வாறு கூறுகின்றார். நான் எனது அனைத்து செல்வத்தையும் சூதாட்டத்தில் தொலைப்பவன் ஆவேன். மறுபடியும் செல்வம் வந்தால் அதனையும் சூதாட்டத்தில் தொலைப்பேன் என்கிறார். இன்று பெரிய பெரிய சூதாட்டக்காரர்களும் கூட இந்த அளவு வெளிப்படையாக அறிவிக்கமாட்மார்கள். எவ்வாறிருப்பினும், இதுதான் அன்றைய காலத்தில் அவர்களது நிலைமை ஆகும்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்ட பின்னர் அவர்களது நிலைமை எவ்வாறு மாறியது? எப்படிப்பட்ட புரட்சி அவர்களிடம் ஏற்பட்டது? எப்படிப்பட்ட எண்ணத்தின் ஆற்றல் இந்த ஈமான் மூலம் அவர்களிடம் ஏற்பட்டது. இதற்கு வரலாறு பல சம்பவங்களை எடுத்துரைக்கின்றது. அதனைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. எவ்வாறு இவ்வளவு விரைவில் அவர்களிடம் மாற்றம் ஏற்பட்டது? அவர்கள் ஈமான் கொண்டவுடன் தற்போது மார்க்க போதனைகளின்படி செயல்படுவதற்கு நாம் நமது உள்ளத்தை வலு மற்றும் உறுதிப்படுத்த வேண்டும் என அவர்கள் தீர்மானித்தனர். மேலும் இறைவனுடைய கட்டளைகளுக்கு எதிராக நாம் ஒருபோதும் செயல்படக்கூடாது என அவர்கள் தீர்மானித்தனர். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு கட்டளையும் நமக்கு இறுதி கட்டளையாகும் எனத் தீர்மானித்தனர். அவர்களது இந்த தீர்மானம் எந்த அளவு வலுவான, உறுதியான உணர்வுடன் இருந்ததென்றால், அவர்களது செயலின் பலவீனம் அவர்களது தீர்மானத்திற்கு முன் ஒரு நொடிப்பொழுது நிற்க முடியவில்லை. அவர்களது நிலைமை எந்த அளவு மாறியது என்றால், அபாயகரமான கஷ்டங்களையும் கூட தாங்கிக் கொள்ள அவர்கள் தயாராகி விட்டனர். தயாராக மட்டும் ஆகவில்லை. மாறாக அவர்கள் தம்மிடம் ஏற்படுத்திய எண்ணத்தின் ஆற்றல் அவர்களது செயல் பலவீனத்தை எந்த அளவு அகற்றியது என்றால், எவ்வளவு தூரம் விலக்கியது என்றால் வேகமாக ஓடும் தண்ணீரின் சுழல் ஒரு துரும்பை இழுத்துக் கொண்டு செல்வதைப் போல் சென்றது. தற்போது மது பற்றிய உதாரணம் கொடுக்கப்பட்டது. அவர்கள் எந்த அளவு மது அருந்தி வந்தனர். அவர்களுக்கு மது அருந்துவது பெருமைக்குரிய விஷயமானது எனக் கூறப்பட்டது. இதன் போதை ஏறும்போது இது மனிதனின் நிலையை எந்த அளவுக்கு ஆக்கி விடுகின்றது. இவர்களது நாடுகளில் வசிப்பவர்கள், இங்குள்ள குடிகாரர்களின் உதாரணம் போன்றவற்றை பெரும்பாலும் பார்த்து வருகின்றோம்.

நமது ஃபஸ்ல் பள்ளிவாசலின் தெருக்களிலும் ஒரு குடிகாரன் திரிகின்றான். அவனிடம் மதுப் பாட்டில்களைத் தவிர வேறெதுவும் இருக்காது. அழுக்கான ஆடைகளை அணிந்திருப்பான். ஆனால் மதுவை வாங்குவான். எனக்கு அவன் கல்வி அறிவு பெற்றவன் ஆவான் எனத் தெரிவிக்கப்பட்டது. அவன் ஒரு காலத்தில் இஞ்சினியர் ஆக பணியாற்றி வந்துள்ளான். தற்போது அவன் வேலை எதுவும் செய்வதில்லை. அவனுக்கு வயது 80 இருக்கும். அவனுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவித் தொகையை அவன் மதுவிலேயே செலவழித்து விடுகின்றான்.

தெருக்களின் ஓரங்களிலேயே வாழ்வைக் கழித்து வருகின்றான். போதை அவனது மூளையையும் பாதித்து விட்டது. அவன் சுயநினைவற்றுப் போனான். போதையில் அவன் இருக்கும் நிலையில் அவனைப் பார்க்கும் போது பயமாக இருக்கும். நான் பலமுறை அவனைப் பார்த்திருக்கின்றேன். சில சமயங்களில் பெண்கள் செல்லும் போது வழியை மறித்துக் கொள்வான். இவனைக் கண்டு இந்த சுற்றுச்சூழலில் வசிக்கும் ஆங்கிலப் பெண்களின் முகத்திலிருந்து கூட அச்சம் வெளிப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், மதுவின் போதை தான் அவனிடம் இந்த நிலையை ஏற்படுத்தியது. சில குடிகாரர்கள் மதுவின் போதையில் எந்த அளவு சென்று விடுகிறார்கள் என்றால், தனது தாய் தந்தையை ஏச ஆரம்பித்து விடுகின்றனர். மோசமான செயல்களை அவர்கள் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். எனக்கு நினைவில் இருக்கிறது. நான் கானாவில் இருந்த போது, டமாலே என்ற நகரம் இருந்தது. அங்கு அந்தக் காலத்தில் ஜமாஅத்தின் ஒரு பெரிய புராஜெக்ட் இருந்தது. எந்த வீட்டில் வசித்து வந்தேனோ அங்கு *Compound Wall* – பொதுச்சுவர் இருந்ததில்லை. வெளிப்புறம் மட்டுமல்ல. உட்புறமும் இருந்ததில்லை. அனைத்து வீடுகளும் பொதுச்சுவர் இல்லாமல் இருந்தது. இங்கும் பொதுவாக அவ்வாறு கட்டப்பட்டுள்ளது. சிலர் தனது வீட்டின் முற்றத்தில் பொதுச்சுவர் அமைத்திருந்தனர். இங்கு பேக்யார்டு இருப்பதைப் போன்று அங்கு இருந்தது.

எவ்வாறிருப்பினும், எனது வீட்டில் பொதுச்சுவர் உட்புறமாகவும் இருந்ததில்லை. வெளிப்புறமாகவும் இருந்ததில்லை. எல்லாப் பகுதியும் திறந்தே இருந்தது. சிறிய இடமாக இருந்தது. வாகனத்தை மட்டும் நிறுத்த முடிந்தது. நான் கூறியது போன்று எவ்விதமான சுவரும், கேட்டும் இருந்ததில்லை. அந்தக் காலத்தின் சுற்றுச்சூழலும் மிகவும் மோசமாக இருந்தது. ஏதாவது ஒரு பொருள் திறந்த வெளியில் கிடந்தால் திருடப்பட்டு வந்தது. தற்போது இங்கும் கூட திருட்டுகள் ஆரம்பித்து விட்டன. இங்கு வீட்டின் கதவுகளை உடைத்து திருட்டு, கொள்ளை போன்றவைகள் நடைபெறுகின்றன. அங்கு அமைதியின் நிலை மிக மோசமானதாக இருந்தது. ஏனென்றால் பொருளாதாரம் மிகவும் மோசமானதாக இருந்தது. நாங்கள் அங்கு ஒரு காவலாளியை வைத்தோம். நான் அவரை நியமித்த போது அவர் இரவில் வருவார். அவரிடம் குறிப்பாக நான் கூறினேன். எனது வாகனம் வெளியில் தான் நிற்கும். அதன் டயர் வெளியில் தான் இருக்கும். டயர் வைக்க முடியாததால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு டயர் அதிகமாக திருடு போகின்றது. எனவே கவனமாக இதனை கண்காணித்து வருமாறு கூறினேன். பெரும்பாலும் மது அருந்தி விட்டு தான் வருவான். டயரை வெளியில் எடுப்பதற்காக முயற்சி செய்த போது டயருக்கு முன்பாக முதலில் அவன் தரையில் விழுந்து கிடப்பான். ஒரு நாள் நான் அவனைப் பார்த்தேன். அன்று நல்ல போதையில் இருந்ததால் முகங்குப்புறக் கிடந்தான். அவன் என்ன பாதுகாப்புப்பணி செய்வான்? ஏதோ ஏசிக் கொண்டிருந்தான். அப்போது அவனை எதுவும் கூறாமல் இருந்தது சிறந்ததாக இருந்தது. இல்லையென்றால் என்னையும் அவன் ஏதாவது ஏச ஆரம்பித்து விடுவான். மறுநாள் அவனுக்கு போதை கொஞ்சம் இறங்கியதும் நான் அவனிடம் நீ போகலாம். உன்னை நாங்கள் பணியில் வைப்பதற்குத் தயாராக இல்லை எனக் கூறினேன். அவன் பலமுறை கெஞ்சினான். எனினும் அவனால் மது அருந்துவதை விட முடியவில்லை. ஆனால் அவன் ஒரு காரியம் செய்தான். அதாவது பணிக்கு வருவதற்கு முன்பு போதை குறையும் அளவிற்கு குடித்து வந்தான் அல்லது அதிக அளவு போதை ஏறாத அளவிற்கு குடித்து வந்தான்.

எவ்வாறிருப்பினும், போதையை கட்டுப்படுத்தவே முடியாது. சில நாட்களுக்குப் பிறகு அவனிடம் மீண்டும் அதே நிலை தான் ஏற்பட ஆரம்பித்தது. எடுத்துரைப்பதன் நோக்கம் என்னவென்றால், போதையில் மனிதன் என்ன செய்கின்றான் என்பதே தெரிவதில்லை. என்ன பேசுகின்றான் என்பதும் அவனுக்கு தெரிவதில்லை. மறுநாள் அவனிடம் நேற்று நீ இவ்வாறெல்லாம் கூறினாய் எனக் கேட்கும் போது அவன் முற்றிலும் மறுக்கின்றான். நான் இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசவே இல்லை என்கிறான். நல்ல மனிதர்களும் கூட போதை குறைந்ததும் அவர்களிடம் இவ்வாறு நீங்கள் போதையில் கூறினீர்கள் எனக் கூறினால் அவர்கள் நம்புவதில்லை.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்தூது (ரலி) அவர்கள் ஒரு மனிதருடைய சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்:***

இது ஒரு இரயில் பயணத்தின் போது ஏற்பட்ட சம்பவமாகும். அந்த மனிதர் ஒரு கண்ணியத்திற்குரிய குடும்பத்தைச் சேர்ந்தவராவார். அவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்தூது (ரலி) அவர்களை அறிந்தவராகவும் இருந்தார். அவர் பூஞ்ச் மாவட்டத்தின் ஒரு மந்திரியின் மகன் ஆவார். அந்தப் பயணத்தில் மதுவின் போதையில் எப்படிப்பட்ட விஷயங்களைக் கூறினார் என்றால், அறிவுள்ள நல்ல நிலையில் உள்ள மனிதரால் ஒருபோதும் அவ்வாறு கூறவே முடியாது.

*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

மதுவின் போதை மனிதனின் மூளையின் மீது திரையிட்டு விடுகின்றது. அது மனிதனை முற்றிலும் பைத்தியமாக்கி விடுகின்றது.

ஆனால் மறுபுறம் நாம் எண்ணத்தின் ஆற்றலில் எப்படிப்பட்ட புரட்சியைக் கண்டோம் என்றால், முஸ்லிம் அல்லாதவர்களில் சிலர் இதனை கஷ்டப்பட்டு தான் ஏற்றுக் கொள்கின்றனர். அந்த எண்ணத்தின் ஆற்றல் ஈமானின் எண்ணத்தின் ஆற்றல் ஆகும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்ட மக்களிடம் உருவாக்கினார்கள். நமக்கு இதற்கான காட்சி அறிவிப்பிலிருந்து தெரிகின்றது.

ஒரு வீட்டில் ஒரு சில சஹாபாக்கள் அமர்ந்திருந்தார்கள். கதவு அடைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அனைவரும் மது அருந்திக் கொண்டிருந்தனர். மது தடை செய்யப்பட்டதற்கான கட்டளை அப்போது இறங்கப்படவில்லை. மக்களிடம் மது அருந்துவதில் எந்த விதமான வெட்கமும் கூச்சஉணர்வும் ஏற்பட்டதில்லை. விரும்பும் அளவிற்கு மது அருந்தி வந்தனர். மயக்கம் வரும் வரை குடித்து வந்தனர். மதுவின் ஒரு பானையை அங்கிருந்த கூட்டத்தினர் காலி செய்திருந்தனர். இந்த பானை என்பது பல கேலன்களைக் கொண்டதாகும். இரண்டாவது பானையை அருந்தத் தொடங்கி இருந்தனர். அப்போது தெருவிலிருந்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அல்லாஹ் இன்றிலிருந்து முஸ்லிம்கள் மீது மது தடைசெய்யப்படுகின்றது எனக் கட்டளை வந்தது எனக் கூறினார்கள் என்றவொரு அறிவிப்பாளரின் சப்தம் வந்தது. இந்த சப்தம் மக்களுடைய காதுகளில் விழுந்ததும் அப்போது மது மயக்கத்தில் மூழ்கியிருந்த ஒருவர் மற்றவரிடம், எழுந்து கதவைத் திறந்து இந்த அறிவிப்பைக் குறித்து உண்மையைத் தெரிந்து வாருங்கள் என்றார். மது அருந்திக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் எழுந்து அறிவிப்பைக் குறித்த உண்மையை அறிவதற்காக எண்ணியபோது, மதுவின் மயக்கத்தில் மூழ்கியிருந்த ஒருவர் கம்பை எடுத்து மதுவின் பானைகளை உடைத்தார். மற்றவர்கள் நீ என்ன செய்து விட்டாய்? முதலில் நீ, கட்டளைக்கு என்ன அர்த்தம்? இது யாருக்கான கட்டளை? எனத் தெரிந்து வந்திருக்கலாமே என்றனர். அதற்கு அவர், முதலில் பானைகளை உடையுங்கள். பின்னர் இந்த கட்டளைக்கு என்ன பொருள் எனக் கேளுங்கள் என்றார். நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளையைக் கேட்டதும், முதலில் கட்டளைக்குக் கட்டுப்பட வேண்டும். பின்னர் நான், இந்த கட்டளைக்கான எல்லை எது? எனப் பார்ப்பேன். மேலும் இது எப்படிப்பட்ட சூழலில் தடையாகும் என்பதையும் பார்ப்பேன் என்று அவர் தொடர்ந்து கூறினார்.

ஆக, இதுதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் மற்றும் மற்றவர்களுக்கு இடையிலுள்ள வித்தியாசம் ஆகும். குடிகாரர்களின் நிலை எவ்வாறானதாக இருக்கும் என ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஒரு மது அருந்திக் கொண்டிருக்கும் குடிகாரரின் முன்பிலிருந்து ஒரு டம்ளரை எடுத்தாலோ அல்லது மதுவை எடுத்தாலோ பிறகு அடிதடி ஏற்பட்டு விடுகின்றது. கிளப்புகள், பார்க்குகள் போன்றவற்றில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. இங்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு கிளப்பில் அல்லது பாரில் போதையின் மயக்கத்தில் ஒருவர் மற்றவரை கொலை செய்து விட்டார். மாறாக விருப்பத்திற்கு மாற்றமான கருத்துக்களைக் கேட்டவுடன் இவர்கள் கொலை செய்ய இறங்கி விடுகின்றனர்.

ஆக, போதையில் மூழ்கியிருப்பவர்கள் தானும் அமைதியாக இருப்பதில்லை. சுற்றுச்சூழலையும் அமைதியாக இருக்க விடுவதில்லை. அவர்கள் தனது நாவைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருப்பார்கள். அவர்கள் தனது தாய் தந்தையரைப் பற்றி கவலையற்றவர்களாகவே இருப்பார்கள். அவர்களது கையும் காலும் தானாகவே நடுங்கக்கூடியதாக இருக்கும். போதையில் அவர்களுக்கு சட்டத்தைப் பற்றியும் கவலை இருக்காது. தண்டனையைப் பற்றியும் கவலை இருக்காது. ஆனால் சஹாபாக்களின் எண்ணத்தின் ஆற்றல் போதையை வென்று விட்டது. அவர்கள் போதையில் மூழ்கியிருந்தும் கூட ஒரு பானை மதுவை அவர்கள் அருந்தியும் இருந்தனர். இரண்டாவது மது பானையை அவர்கள் அருந்தக் கூடியவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் அவர்களது காதுகளில் ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள், எனக்கு இறைவன், மது முஸ்லிம்களுக்கு தடை செய்யப்படுகின்றது எனக் கட்டளையிட்டுள்ளான் எனக் கூறினார்கள். உடனே அவர்களது போதை இறங்கி விடுகிறது. அவர்கள் முதலில் மது பானைகளை உடைக்கின்றனர். பிறகு அறிவிப்பு செய்பவரிடம் இந்த அறிவிப்பிற்கு என்ன விளக்கம் எனக் கேட்கின்றனர்.

இது ஒரு வீட்டில் நடந்த சம்பவம் மட்டுமல்ல. இது ஒரு சிலரின் சம்பவம் அல்ல. அறிவிப்பில் வருகின்றது. அறிவிப்பாளர் கூறுகின்றார்:

மதீனாவில் மது கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த பல வீடுகள் இருந்தன. இந்த அறிவிப்புடன் எந்த அளவு வேகமாக மது பானைகள் உடைக்கப்பட்டதென்றால், மதீனாவின் தெருக்களில் மது தண்ணீரைப் போன்று ஓடியது. எப்படிப்பட்ட ஆச்சரியப்படும் எண்ணத்தின் ஆற்றலாக அது இருக்கிறது என்று பாருங்கள்!

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*** இந்த எண்ணத்தின் ஆற்றல் எப்படிப்பட்டதென்றால், இது ஏற்பட்ட பிறகு உலகில் எந்தவொரு விஷயமும் இடையில் தடையாக நிற்க முடியாது. மாறாக ஒவ்வொரு விஷயத்தையும் எண்ணத்தின் ஆற்றல் அபகரித்துக் கொண்டே செல்லும்.

ஆக, எண்ணத்தின் ஆற்றலை அதிகளவு கொண்டவர்கள் ஆன்மீக வாழ்வின் அரசர் ஆவார்கள். அதன் வீரர் ஆவார்கள். அவர்கள் எந்தப்பக்கம் எழுந்தாலும், எந்தப் பக்கம் சென்றாலும், எந்தப் பக்கம் செல்வதற்கு அவர்கள் நினைத்தாலும் ஷய்த்தான் அவர்களுக்கு முன்பாக தனது ஆயுதங்களைக் கீழே போட்டுக் கொண்டே செல்வான். கஷ்டத்தின் மலையும் அவர்கள் முன்பு வந்தாலும் அது வெண்ணெய் கட்டி உருகுவதைப் போல அது உருகி விடும்.

ஆக, இப்படிப்பட்ட எண்ணத்தின் ஆற்றல் உருவாகி விட்டால், இந்த அளவுக்கு ஈமான் ஏற்பட்டு விட்டால் பிறகு மக்களது செயல் சீர்திருத்தத்திற்காக வேறு வழியினைப் பின்பற்றுவது அவசியமாக இருக்காது. 1400 வருடங்களுக்கு முன்பு சீர்திருத்தத்திற்காக ஈமானின் ஆற்றல் மூலமாக ஏற்பட்ட புரட்சி இவ்வளவு பெரிய அளவில் உலகில் வேறெங்கும் தென்படாது. அந்த அளவு இந்த மாற்றம் ஏற்பட்டது. ஆனால் இதனுடன் இணைந்து போகக்கூடிய உதாரணங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்ட மக்களிடம் நமக்கு தென்படுகின்றது. புகையிலை உபயோகிப்பது ஹராம் இல்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை வெறுத்துள்ளார்கள்.

மேலும் ஓரிடத்தில் இதனையும் கூறியுள்ளார்கள்: அதாவது இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இருந்திருந்தால் அதை தடை செய்திருப்பார்கள் என்றும், அது ஒரு தீமையாகும். அதில் போதை இருக்கின்றது என்றும் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பயணத்தின் போது ஹுக்காவை விருப்பமற்றதாகத் தெரிவித்த போது, ஹுக்கா அருந்துவதைப் பழக்கமாகக் கொண்ட அன்னாரது சஹாபாக்கள் தனது ஹுக்காக்களை உடைத்து விட்டனர். அதன் பின்னர் புகையிலையின் பக்கம் ஒருபோதும் சென்றதில்லை. அவர்கள் எங்களுக்கு அதன் பின்னர் அதன் பக்கம் கவனம் ஏற்படவே இல்லை எனக் கூறுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அனைத்து தீமைகளை விட்டு விட்ட உதாரணங்களும் இருக்கின்றன. எந்த அளவுக்கென்றால், மது போன்ற தீமைகளில் மூழ்கியிருந்தவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அதனை முற்றிலுமாக விட்டு விட்டனர்.

ஆக, இந்த உதாரணங்களைத்தான் நாம் நிலைநிறுத்த வேண்டும். எந்தவித சட்டத்திற்குப் பயந்து, தனது சுற்றுச்சூழலுக்குப் பயந்து தீமைகளை விடக்கூடாது. அந்த தீமைகளிலிருந்து நாம் விலகியிருப்பது நமது தாய் தந்தையரின் அச்சத்தினால் இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட சிந்தனை இருக்கக் கூடாது. சிந்தனை இருக்க வேண்டும் என்றால், இவ்வாறு இருக்க வேண்டும். அதாவது அல்லாஹ், அவனது ரஸூல் (ஸல்) நம்மை இதிலிருந்து தடுத்திருக்கின்றார்கள். மேலும் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) இதனை தடை செய்திருக்கின்றார்கள். எனவே நாம் இதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும்.

முஸ்லிம் நாடுகளில் மது சாதாரணமாக கிடைக்காது. பாகிஸ்தான் போன்ற நாடுகளைப் பற்றி எனக்குத் தெரியும். சட்டம் அதற்கு அனுமதி அளிப்பதில்லை. ஆனால் மறைமுகமாக எப்படிப்பட்ட மது தயார் செய்யப்படுகிறது என்றால், நாட்டு மது போன்ற மதுக்கள் தயார் செய்யப்படுகின்றன. அதனை மக்கள் அருந்துகின்றனர். அது மிகவும் அதிக போதை கொண்டதாக இருக்கும். வசதி படைத்த கூட்டம், பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி உயர்தர மது பானங்களுக்கான ஏற்பாடுகளை செய்து கொள்கின்றது. நான் சில விடுதி மாணவர்களையும் பார்த்திருக்கின்றேன். அவர்கள் ஆல்கஹால் கலந்துள்ள Syrup அல்லது மருந்துகளை குறிப்பாக இருமல் மருந்துகள் போன்றவற்றை

போதைக்காகப் பயன்படுத்துகின்றனர். பிறகு இவை தீங்கை ஏற்படுத்துகின்றது. அதில் மற்ற மருந்துகளும் கலந்திருக்கின்றன.

ஆக, இப்படிப்பட்ட சுற்றுச்சூழலிலிருந்து அஹ்மதிகள் தவிர்ந்திருப்பது மிகவும் அவசியமாகும். தனது எண்ணத்தின் ஆற்றல் மூலம் இந்த தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது அவசியமாகும். இன்றைய நாட்களில் ஐரோப்பிய நாடுகளிலும் மிகவும் அபாயகரமான மதுக்களைத் தவிர ஷிஷே என்ற பெயரில் ரெஸ்டாரண்டுகளில் குறிப்பாக முஸ்லிம் ரெஸ்டாரண்டுகளில் மதுக்கள் கிடைக்கின்றன. இதைப் போன்று ஹுக்கா என்ற பெயரில் போதையைக் கையாளுகின்றனர். அது ஒருவகையான ஹுக்கா ஆகும். இங்கும் நமது சில இளைஞர்களும் இளைஞிகளும் இந்த ஷிஷேவை உபயோகிக்கின்றார்கள் என்பது எனக்கு தெரிய வந்துள்ளது. மேலும் இதில் போதை இல்லை எனக் கூறுகின்றனர். அல்லது எப்போதாவது உபயோகிப்பதால் ஒன்றுமில்லை எனக் கருதுகின்றனர்.

நினைவில் கொள்ளுங்கள்! இவ்வாறு எப்போதாவது பயன்படுத்துகின்றபோது ஒருகாலம் வரும். அப்போது நீங்கள் பெரிய போதையில் மூழ்கி விடுவீர்கள். பிறகு அதிலிருந்து விடுபடுவது மிகவும் கஷ்டமாகி விடும். ஆக, இப்போதிருந்தே தனது எண்ணத்தின் ஆற்றல் மூலம் செயல்பட வேண்டும். இந்த தீமையிலிருந்து விடுபட வேண்டும். இதற்கு தனது ஈமானை உற்று நோக்க வேண்டும். ஈமானின் வெப்பம் எண்ணத்தின் ஆற்றலை உருவாக்குகிறது. இது உடனடியாக விரைவாக மாபெரும் முடிவுகளை எடுத்துரைக்கின்றது. இதனை நாம் சஹாபாக்களின் உதாரணத்தில் பார்த்தோம். அவ்வாறு இல்லையென்றால் சட்டத்தினால் இவர்களை தடுக்க முடியாது.

நான் கூறியது போன்று பாகிஸ்தானில் மது விற்பதற்கான தடை உள்ளது. மது கிடைப்பதும் இல்லை. ஆனாலும் மக்கள் மது அருந்துகின்றனர். அதற்கான ஏற்பாட்டைச் செய்து விடுகின்றனர். பல்வேறு வழிகளை அவர்கள் கையாளுகின்றனர். அமெரிக்காவில் ஒருமுறை மது பொதுவாகவே தடைசெய்யப்பட்டது. அதனால் மக்கள் வேறொரு வழியைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். ஸ்பிரிட்டை அருந்த ஆரம்பித்தனர். ஸ்பிரிட் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் மிகவும் அதிகமாகும். இதன் காரணத்தால் மக்கள் மரணிக்க ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஈமான் இல்லாமல் இருந்தது. ஆகையால் உலக சட்டத்தின் முயற்சி வெற்றி பெறவில்லை. போதையின் அடிமைகள் எந்த அளவு நிர்பந்தத்திற்கு ஆளானார்கள் என்றால், ஸ்பிரிட்டைக் குடித்து தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டனர். பிறகு அரசாங்கம், மருத்துவர் அனுமதி அளித்தால் மது கிடைக்கும் என சட்டம் இயற்றியது. மருத்துவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்பதும் சில காரணங்களினால் ஆகும். இதன் மூலம் காரணிகளை Justify செய்யலாம் என நினைத்தனர். ஆனால் இதன் விளைவு என்ன ஆயிற்று? ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் தனது வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக போலி சான்றிதழ்களை வழங்க ஆரம்பித்தனர். Practice இல்லாமல் மருத்துவர்கள் கூட மது அருந்துவதற்கு சான்றிதழ் கொடுத்து சம்பாதிக்க ஆரம்பித்தனர். இறுதியில் ஒரு கட்டத்தில் சட்டம் தலை குனிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வயது வரம்பு பின்பற்றப்பட்டவாறு தற்போது மது எல்லா இடங்களிலும் கிடைக்கின்றது.

சில இடங்களில் இதற்கான வயது வரம்பு 21 ஆகும். சில இடங்களில் இதற்கான வயது வரம்பு 18 ஆகும். சில இடங்களில் பெரியவர்கள் உடன் இருந்தால் 15,16,17 வயது பிள்ளைகளும் கூட சில குறிப்பிட்ட வகையான மருந்துகளை அருந்தலாம். ஆக, இது தனது சட்டத்தின் இயலாமை மீது திரையிடுவதற்கான சாக்குப்போக்கு ஆகும். எந்த அளவு முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றார்களோ அந்த அளவு தீமைகள் செய்வதற்கான சட்டமும் இயற்றப்படுகின்றன. தீமைகளைத் தடுக்க முடியவில்லை என்றால் பிறகு சட்டத்தில் எளிமையை ஏற்படுத்தி விடுகின்றனர். ஆனால் இறைவனுடைய கட்டளைகளில் எது தீமை என்று கூறப்பட்டுள்ளதோ அது எப்போதும் தீமை தான். இறைவன் நமது விருப்பங்களுக்கேற்ப செயல்படுபவன் அல்லன். மாறாக நாம் நமது செயல்களைச் சீர்திருத்துவதற்காக அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த பின்பற்றுதலும் நமது ஈமானுடைய தரம் உயர்ந்ததாக இருக்கும் போது தான் நடைபெறும்.

இன்றைய காலத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் எந்த சமுதாயத்தைப் பார்த்து அறிவற்றவர்கள் என்று கூறுகின்றதோ, எவர்களை கல்வி அறிவற்றவர்கள் எனக் கருதுகின்றதோ அவர்கள் தமது ஈமானை போதனையின் மீது வெற்றிபெறச் செய்தனர். தமது அமலை சீர்திருத்தினார்கள். மேலும் உலகில் தமது சிறந்த செயல்களின் கொடியை நிறுவி உலகினை அதன் பின்னால் செல்ல வைத்தனர். ஆக, மார்க்க விஷயத்தில் எண்ணத்தின் ஆற்றல் தமது ஈமானின் உறுதிப்பாடாகும். அது நல்ல அமல்கள் செய்வதன் மூலம் நிலைபெறும். மேலும்

அது தீமைகளிலிருந்து காப்பாற்றுகிறது என்பதும் தெளிவாக வேண்டும். இதனுடன் ஏற்கனவே கூறியது போன்று அறிவாற்றலும் இருக்கிறது. ஒருவரிடம் அறிவாற்றல் இருக்கும் என்றால், அறிவின் காரணமாக செயலில் ஏற்படக்கூடிய பலவீனங்கள் அகன்று விடும். இதற்கான உலகியல் உதாரணம் என்னவென்றால், சிறு வயதில் பிள்ளைகளிடம் சில பழக்கங்கள் இருக்கும். சிலருக்கு மண் தின்னும் பழக்கம் இருக்கும். அதன் தீமைகள் பற்றி தெரிய வந்தவுடன் பிறகு அதிலிருந்து தன்னை தடுத்துக் கொள்வார்கள். இதுபோன்று பல பழக்கவழக்கங்கள் இருக்கின்றன.

ஒரு பெண் பிள்ளை இருந்தாள். அவளைப் பற்றி எனக்குத் தெரியும். அவளுடைய பழக்கம் என்னவென்றால் அவள் இரவில் தூங்கும் போது தனது தலை முடியைப் பிடித்து இழுப்பாள். இதனால் அவளது தலை புண்ணாகிக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக வளர்கிறாள். அவளுக்கு இது தவறு எனவும் தெரிகிறது. முயற்சி செய்து அதிலிருந்து விடுபட்டும் வருகிறாள்.

ஆக, இதுபோன்ற பழக்கங்கள் அறிவு கிடைத்தவுடன் நின்று விடுகின்றன. இதனைப் போன்றே யாருக்கு இறைவனைப் பற்றிய அச்சம் சிறிதளவாவது இருக்குமோ, அவரிடம் செயல்களினால் ஏற்படக்கூடிய பாவங்கள் மற்றும் அல்லாஹ்வின் வெறுப்பைப் பற்றிய சரியான உணர்வை ஏற்படுத்தினோம் என்றால், மேலும் பாவங்கள் மூலம் அல்லாஹ் எவ்வாறு கோபம் அடைவான் எனப் புரிய வைக்கும் போது அவர் பாவங்களிலிருந்து தவிர்ந்து விடுகின்றார்.

அடுத்ததாக, செயலில் பலவீனம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய மூன்றாவது விஷயம் செயல் ஆற்றலை சரியாக உபயோகப்படுத்தாமையாகும். சிலர் இந்த விஷயம் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது என எண்ணலாம். ஒருவகையில் விஷயம் திரும்பத் திரும்ப கூறப்பட்டாலும் புரிய வேண்டும் என்பதற்காக பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் செயல் ஆற்றலின் குறைபாடு அல்லது செயல் ஆற்றல் இல்லாமல் இருப்பதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக, முதலாவது காரணம், பழக்கவழக்கம் ஆகும். ஒரு மனிதரிடம் எண்ணத்தின் ஆற்றலும் இருக்கிறது. அறிவும் இருக்கிறது. ஆனால் பழக்கத்தின் காரணமாக நிர்பந்திக்கப்பட்டு செயலில் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றார். அல்லது ஒருவருக்கு இறைவனது நெருக்கம் கிடைக்கப்பெறும் என்பது தெரிகிறது. ஆனால் உலக விஷயங்களுக்காக உலகின் மீதுள்ள அன்பின் உணர்வு அல்லது உலக விஷயங்களின் இழப்பினால் இழப்பின் உணர்வு அவனை வென்று விடுகிறது. இதன் காரணமாக இப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதிலிருந்து தடுக்கப்பட்டவராக ஆகி விடுகின்றனர்.

இப்படிப்பட்ட மக்களுக்கு உட்புறத்திற்குப் பதிலாக வெளிப்புற மருத்துவம் செய்வது அவசியமாகும். ஏனென்றால் இதன் மூலமாகத்தான் செயல் ஆற்றலில் முன்னேற்றம் அடைய முடியும். இதற்கு சரியான உதவி அவசியமானதாகும். சரியான உதவி கிடைக்கும் என்றால் முன்னேற்றம் கிடைக்கப்பெறும். ஆக சீர்திருத்தம் பெறுவதற்கு சரியான உதவியினைத் தேடுவது அவசியமாகும். ஒருவருக்கு ஒரு விஷயத்தைப் பற்றி ஆரம்பித்திலேயே தெரியும் என்றால், பிறகு அவரை எவ்வாறு சீர்திருத்த முடியும். பாவங்களைச் செய்தால் இறைவனது கோபம் தன்மீது உண்டாகும் என்பதை தெரிந்த ஒருவருக்கு இறைவனது கோபத்தைப் பற்றி எடுத்துரைப்பது எந்தப் பலனையும் தராது. அல்லது இறைவனது அன்பைப் பற்றி தெரிந்த ஒருவருக்கு இறைவனது அன்பைப் பற்றி கூறுவது எந்தப் பலனையும் தராது. ஏனென்றால் அவருக்கு ஏற்கனவே அதற்கான அறிவு இருக்கிறது. அவரிடம் எண்ணத்தின் ஆற்றலும் இருக்கின்றது. ஆனால் முழுமையாக இல்லை. அறிவைப் பற்றி பார்த்தோம் என்றால் அவரிடம் ஏற்கனவே இருக்கவும் செய்கிறது. நாம் அறிவை வழங்கியுள்ளோம். ஆனால் இறைவனுடைய அன்பு மற்றும் அவனுடைய கோபம் பற்றிய அச்சம், உள்ளத்தில் துரு ஏற்பட்டிருப்பதால் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

அதற்கு வேறொரு பொருளின் தேவை இருக்கிறது. ஏனென்றால் இறைவன் அவனுடைய பார்வையிலிருந்து மறைந்தவனாக இருக்கின்றான். அதாவது அவர் எனக்கு இறைவன் தென்படுவதில்லை. முன்னால் இருக்கக்கூடிய பொருள்கள் தான் தென்படுகின்றது என்று கூறுகிறார். எவருடைய ஈமான் முழுமையானதாக இல்லையோ இறைவனும் அவருடைய பார்வையிலிருந்து மறைந்து விடுகின்றான். அதனால் தான் அவன் இறைவனுக்கு அஞ்சுவதில்லை. இப்படிப்பட்ட மக்களுக்கு வேறு சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இவர்கள் பயப்படுகின்றார்கள்.

ஆக, இப்படிப்பட்ட மக்களது உள்ளத்தில் வேறு சில மனிதரது திகிலை ஏற்படுத்தினோம் என்றால், அல்லது உலகப் பொருட்களைப் பயன்படுத்தியவாறு அவரை சீர்திருத்தினோம் என்றால் அவரிடம் சீர்திருத்தம் ஏற்படும். ஆனால் அந்த ஆற்றல் இன்றைய காலத்து உலகச் சட்டங்களைப் போன்று அரசியல் நலனின் காரணமாகப் பயந்து சீர்திருத்தத்திலிருந்து பின்வாங்கக் கூடியதாக இருக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும்.

எவ்வாறிருப்பினும் இந்த மூன்று வகையான மக்கள் உலகில் இருக்கின்றனர். உலகில் இந்த நோய்களும் இருக்கின்றன. சிலர் இருக்கின்றனர். அவர்களது செயலில் பலவீனம் ஏற்படுவதற்குக் காரணம் ஈமானில் முழுமையாக இல்லாதிருப்பதேயாகும். மேலும் சிலரது செயலில் பலவீனம் ஏற்படுவதற்குக் காரணம் அவர்களது அறிவு முழுமையாக இல்லாதிருப்பதேயாகும். மேலும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் ஈமானும் அறிவும் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் மற்ற வழிமுறைகள் அவர்களிடம் துருப்பிடித்து இருப்பதால் இந்த இரண்டு மருத்துவமும் அவர்களுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. மேலும் வெளிப்புற மருத்துவத்தின் தேவை ஏற்படுகின்றது. ஏதாவது உதவியின் தேவை ஏற்படுகின்றது.

உதாரணமாக, ஒருவருக்கு எலும்பு முறிந்து விட்டால், சில சமயங்களில் எலும்பு இணைவதற்காக மாவு கட்டுப்போட்டு அவருக்கு உதவி செய்யப்படும். சில சமயங்களில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு எலும்பு வலுப் பெறுவதற்காக உள்ளே வைக்கப்படுகின்றன. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எலும்பு இணைந்து விடுகிறது. அதன் பின்னர் அந்த உதவிகள் அகற்றப்பட்டு விடுகின்றன.

இதனைப் போன்று சில மனிதர்களுக்கு சிறிது காலம் வரை உதவி தேவைப்படுகின்றது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இந்த உதவி வலுவை ஏற்படுத்தி விடுகின்றன. அதன் பின்னர் அவரே செயல் பட ஆரம்பித்து விடுகின்றார். இதன் மூலம் செயல் பலவீனங்கள் அகன்று விடுகின்றன. நான் கடந்த குத்பாவில் கூறியது போன்று நமது ஜமாஅத்தின் அமைப்பு, நமது பொறுப்பாளர்கள், நமது கிளை அமைப்புகள் போன்றவை இதுபோன்ற செயல் பலவீனங்களை அகற்றுவதற்குக் காரணியாக ஆக வேண்டும். ஆனால் இந்த பொறுப்பாளர்களிடமோ ஜமாஅத் மக்களிடமே எண்ணத்தின் ஆற்றலில் குறைபாடு இருக்கும் என்றால், அறிவில் பலவீனம் இருக்கும் என்றால், செயலில் குறைபாடு இருக்கும் என்றால் மற்றவர்களுக்கு உதவியாக எவ்வாறு இருக்க முடியும்?

ஆக, ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு ஜமாஅத் அமைப்பின் ஒவ்வொரு பகுதியையும், மாறாக ஒவ்வொரு அஹ்மதியும் தன்னை ஆராய்ந்தவாறு சீர்திருந்துவது அவசியமாகும். பலவீனமாக உள்ள தனது நண்பர்களுக்கும் நெருக்கமானவர்களுக்கும் உதவியாக இருப்பது அவசியமானதாகும். இதன் மூலம் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் செயல் சீர்திருத்தத்தின் உயர் தரத்தை அடைபவர்களாக ஆக வேண்டும். இதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். ஒரு வருத்தத்திற்குரிய செய்தி ராவல்பிண்டியைச் சேர்ந்த முஹம்மது சர்வர் சாஹிப் உடைய மகன் சிறுவன் அர்ஸாலன் சர்வர் ஜனவரி 14–ம் தேதி ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அர்ஸாலன் சர்வர் சாஹிப் உடைய தாத்தா முஹம்மது யூசுஃப் சாஹிப் அவர்கள் சாட் நம்பர் 55, ஜேடா வாலான் ஃபைஸ்ஸலாபாத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஷஹீது மர்ஹூம் உடைய தாத்தாவும் தாயும் மூன்றாவது கிலாஃபத்தின் காலத்தில் 1973 –ல் பைஅத் செய்தார்கள். இவரது தாய் பிறப்பு அஹ்மதி ஆவார். 1986 –ல் இவரது குடும்பம் ராவல்பிண்டி குடியேறியது. மர்ஹூம் உடைய தந்தை மாவு மில்லில் சூப்பர்வைஸராக பணியாற்றி வந்தார்.

மர்ஹூம் அர்ஸாலன் சர்வர் ராவல்பிண்டியில் தான் பிறந்தார். இஸ்லாமாபாத்தில் FSC மாணவர் ஆனார். மரணத்தின் போது இவருக்கு 17 வயது ஆகும். சிறுவன் அர்ஸாலன் சர்வர் உடைய ஷஹாதத் சம்பவம் இவ்வாறு நடைபெற்றுள்ளது. அதாவது ஜனவரி 13, 14 தேதி இரவு 1.00 மணி அளவில் தனது தெருவில் அஹ்மதி அல்லாத நண்பர்களுடன் 12 ரபிய்யுல் அவ்வல் தொடர்பாக லைட்டிங் போன்றவற்றைச் செய்து கொண்டிருந்தனர். அப்போது தெருவின் முனையில் ஒரு வாகனம் வந்து நின்றது. அதன் பின்னர் சிறிது நேரம் கழித்து ஒரு மோட்டார் சைக்கிலும் அதன்அருகே வந்து நின்றது. இவர்கள் அங்கு வருவதற்கு முன்பாக குப்பைத் தொட்டியிலிருந்து ஒரு வெள்ளை நிற பையில் எதனையோ எடுத்து வந்தார்கள். அது ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த சமயத்தில் அந்தத் தெருவில் இருந்த இரண்டு அஹ்மதி அல்லாத இளைஞர்களும் ஸாலன் சர்வர் சாஹிபும் அதனைக் கண்டு சந்தேகம் அடைந்தனர். பெரியவர்களையும் எழுப்புவோம் என பரஸ்பரம் ஆலோசனை செய்தனர். அதன்படி ஸாலன் சாஹிப் சப்தமிட்டார். இதனைக் கண்ட ஒருவர் இரண்டு, மூன்று முறை வானத்தை நோக்கிச் சுட்டார். இதனைக் கண்ட இளைஞர்கள் தெருவின் மற்றொரு பக்கம் சென்றனர். அந்த நபரும் பின்னால் வந்து இரண்டு மூன்று முறை சுட்டார். அர்ஸாலன் சர்வர் ஓடும் போது இரண்டு நண்பர்களுக்கும் மத்தியில் இருந்துள்ளார். தெருவிலுள்ள துப்பாக்கி

சூட்டின் அடையாளங்களைப் பார்க்கும் போது வலது மற்றும் இடப்புறம் இருந்த அந்த அஹ்மதி அல்லாத இரண்டு பேர் மீது துப்பாக்கி சூடு நடைபெற்றுள்ளது தெரிய வருகிறது.

அர்ஸாலன் சாஹிப் ஓடுகின்ற சமயத்தில் பின்னால் திரும்பிப் பார்த்த போது, அவரது தலையில் குண்டு பாய்ந்தது. அந்த இடத்திலேயே அவர் விழுந்து விட்டார். மற்ற இரண்டு பேரும் தெருவில் இருந்த வாகனத்திற்குப் பின்னால் படுத்துக் கொண்டனர். தாக்குதல் நடத்தியவர்கள் சிறிது தூரம் வரை வந்து விட்டு ஓடி விட்டனர். சிறுவன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். மருத்துவமனை அருகில் தான் இருந்தது. மருத்துவர்கள் முயற்சியும் செய்தார்கள். ஆனால் மூளையில் குண்டு பாய்ந்திருந்ததால் காப்பாற்றுவது கஷ்டம் எனக் கூறினர். இரத்தம் போன்றவையும் கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்குப் பிறகு சிறுவன் ஷஹீதானான். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இவர் அனைவராலும் விரும்பக்கூடியவர் ஆவார். அஹ்மதி அல்லாதவர்களும் துக்கம் விசாரிக்க வந்திருந்தனர். இவர் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார். இவர் தனது 14 வயதில் வஸிய்யத் செய்துள்ளார். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் காயித் ஆக பணியாற்றி வந்தார். இதற்கு முன்பு அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவிலும் பணியாற்றி வந்துள்ளார். இவரது சகோதரரும் ஜமாஅத்தின் பல்வேறு தொண்டுகளைச் செய்பவர் ஆவார்.

***ராவல்பிண்டியின் காயித் சாஹிப் கூறுகின்றார்கள்:***

மர்ஹூம் அர்ஸாலன் சர்வர் மற்றும் அவரது அனைத்து சகோதரர்களும் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் சிறப்பாக பணியாற்றுபவர்கள் ஆவார்கள். பாதுகாப்புப் பணி மற்றும் ஏனைய ஜமாஅத் பணிகளில் அதிக ஆர்வத்துடன் கலந்து கொள்பவர்கள் ஆவார்கள்.

***ராவல்பிண்டியின் முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்:***

பெரும்பாலும் அலுவலகத்திற்கு வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது நூலைப் படிப்பதையே ஷஹீத் மர்ஹூம் வழக்கமாகக் கொண்டிருந்தார். தொழுகையை முறையாகப் பேணக்கூடியவர் ஆவார். தொழுகையை உருக்கத்துடன் தொழுபவர் ஆவார். அய்வானே தவ்ஹீதில் தொடர்ந்து ஜுமுஆ தொழுது வருபவர் ஆவார். அங்கு காவல்துறையின் பாதுகாப்பும், சில தடைகளும் இருந்து வந்தது. அல்லாஹ்வின் அருளால் சந்தாக்களை முறையாக வழங்குபவர் ஆவார். அல்லாஹ் மர்ஹூமின் தர்ஜாவை உயர்த்துவானாக! இவரது பிரிவால் வாடுபவர்களுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக! மர்ஹூமுடைய பிரிவால் வாடுபவர்களில், தந்தை முஹம்மது சர்வர் சாஹிப் – செயலர், தஃவத்தே இலல்லாஹ் ஹல்கா, தாய் இஷாத் பர்வீன் சாஹிபா, இவர்களைத் தவிர மூன்று சகோதரர்கள் உள்ளனர். யாஸர் அஹ்மது – இவர் ஜெர்மனியில் வசிக்கிறார். நாசர் அஹ்மது – இவர் அமெரிக்காவில் வசிக்கிறார். முஹம்மது அஹ்மது – இவர் ராவல்பிண்டியில் வசிக்கிறார். அல்லாஹ் அனைவருக்கும் பொறுமையை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HAZRAT KHALIFATUL MASIH V
at BAIT-UL-FUTUH Mosque, London.
on **17.01.2014**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456